பதிவஞ்சல் மூலமாக

ந.க. எண்.62179/ப.தொ.4/2015/இரு3

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு
மருந்துத் துறை, சென்னை–6
நாள்.04.01.2021

பொருள் பணியாளர் தொகுதி – பொது சுகாதாரம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு.ஆ.சுப்பிரமணி த/பெ (அமரர்) திரு.வெ.ஆறுமுகம் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு பணிவரன்முறைப்படுத்தப்பட்டது – ஆணை வரப்பெற்றது – தொடர்பாக.

பார்வை
1. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், கரூர் அவர்களின் ந.க.எண்.4919/அ2/2006, நாள்.29.06.2015
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.62179/ பதொ4/2015/இரு3, நாள்.25.08.2018
3. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், கரூர் அவர்களின் ந.க.எண்.5972/அ1/2018, நாள்.29.10.2018
4. அரசாணை (2ப) எண்.131, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை, நாள்.11.11.2020.
5. அரசு கடித எண்.42328/ஏபி1/2019–3, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை நாள்.11.11.2020

---------

பார்வையில் இரண்டில் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திரு.ஆ.சுப்பிரமணி என்பவர் கருணை அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையம், வாங்கல், கரூர் சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டார்.

2. பார்வை நான்கில் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் இணைந்த நாளான 30.08.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து தனியரின் அனைத்து அசல் சான்றிதழ்களும் பார்வை ஐந்தில் காணும் அரசு கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

3. எனவே, துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், கரூர் அவர்களை தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் கருணை அடிப்படையில் பணிநியமனம் தொடர்பாக பெறப்பட்ட தனியரின் கீழ்கண்ட அனைத்து சான்றிதழ்கள், அரசாணை மற்றும் மறைந்த அரசு ஊழியர் திரு.வெ.ஆறுமுகம் என்பவரின் பணிப்பதிவேடு ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதனை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகையை அளிக்குமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், கரூர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

| | |
|---|---|
| 1 | பத்தாம் வகுப்பு சான்றிதழ் (அசல்) –2 |
| 2 | மாற்றுச் சான்று (அசல்) |

சு.தாமரைசெல்வம்
துணை இயக்குனர் (நிர்வாகம்)

பெறுநர்:
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் கரூர் அரசாணை(2ப) எண்.131, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை, நாள்.11.11.2020. அசல் ஆணை தனியருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். (அரசாணை இணைக்கப்பட்டுள்ளது)

நகல்:
திரு. ஆ.சுப்பிரமணி , இளநிலை உதவியாளர்
மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், வாங்கல், கரூர் சுகாதாரப் பகுதி மாவட்டம்
துணை இயக்குநர். சுகாதாரப் பணிகள் கரூர்: - மூலமாக
இருப்புக்கோப்பு – உபரி –2.

// உண்மைநகல் - உத்தரவின்படி -அனுப்பப்படுகிறது //

11/1/21

கண்காணிப்பாளர்

11/1/2021